### நாடு முழுவதும் இளநிலை மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்காக

# 5,500 மையங்களில் இன்று 'நீட்' தேர்வு

## தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் நடைபெறுகிறது

சென்னை

இளநிலை மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கான 'நீட்' தேர்வு நாடு முழுவதும் சுமார் 5,500 மையங்களில் இன்று நடைபெறுகிறது. மருத்துவப் படிப்புகளில் சுமார் 2 லட்சம் இடங்கள் உள்ள நிலையில், 22.80 லட்சம் மாணவ, மாணவிகள், தேர்வு எழுதுகின்றனர். நீட் தேர்வு முடிவுகளை அடுத்த மாதம் வெளியிட தேசியத் தேர்வுகள் முகமை திட்டமிட்டுள்ளது.

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகள், ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவை தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET - 'நீட்') தகுதி பெறுபவர்களைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. இந்த தேர்வை தேசியத் தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்துகிறது.

அதன்படி, 2026-27-ம் கல்வி ஆண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் இன்று பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறுகிறது.




நீட் தேர்வு நடைபெற உள்ள கோவை அரசு கலைக் கல்லூரி வளாகத்தின் வெளியே, மாணவர்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள பொருட்கள் குறித்த பதாகையை பொருத்தும் ஊழியர். படம்: ஜெ.மனோகரன்

**தமிழகத்தில் 30 நகரங்களில்..**

தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருச்சி, மதுரை, கோவை என 30 நகரங்கள் உட்பட நாடு முழுவதும் 552 நகரங்கள் மற்றும் துபாய், அபுதாபி, தோகா, மஸ்கட், ரியாத், சிங்கப்பூர் என வெளிநாடுகளில் 14 இடங்களில் தேர்வு நடைபெறும். அந்த வகையில், சுமார் 5,500 மையங்களில் தேர்வு நடைபெறுகிறது.

சுமார் 2 லட்சம் இடங்கள் உள்ள நிலையில், 9.47 லட்சம் மாணவர்கள், 13.33 லட்சம் மாணவிகள் என மொத்தம் 22.80 லட்சம் பேர் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் தேர்வு நடைபெறும். இயற்பியல், வேதியியல், உயிரியல் (தாவரவியல், விலங்கியல்) பாடங்களில் இருந்து தலா 50 கேள்விகள் என மொத்தம் 200 கேள்விகள் கேட்கப்படும். அதில் 180 கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும்.

**மொத்தம் 720 மதிப்பெண்கள்**

ஒரு கேள்விக்கு 4 மதிப்பெண் என மொத்தம் 720 மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. ஒரு தவறான பதிலுக்கு ஒரு மதிப்பெண் (நெகட்டிவ்) குறைக்கப்படும். நீட் தேர்வு முடிவுகளை அடுத்த மாதம் வெளியிட என்டிஏ திட்டமிட்டுள்ளது.

**ஆள்மாறாட்டத்தை தடுக்க..**

கடந்த 2024-ம் ஆண்டு வடமாநிலங்களில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சிலர் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டு, உண்மையான தேர்வர்களுக்கு பதிலாக நீட் தேர்வு எழுதியதாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக பிஹார், ராஜஸ்தான், ஜார்க்கண்டில் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், ஆள்மாறாட்டத்தை தடுக்கும் விதமாக, 'நீட் தேர்வு நடைபெறும் மே 3-ம் தேதி மற்றும் அதற்கு முந்தைய நாளான 2-ம் தேதி ஆகிய 2 நாட்களும் எம்பிபிஎஸ் மாணவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டாம். அத்தியாவசியக் காரணங்கள் இருந்தால் மட்டும் விலக்கு அளிக்கலாம்' என்று நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாகங்களுக்கு தேசிய மருத்துவ ஆணையம் கடந்த வாரம் சுற்றறிக்கை அனுப்பியது.

அதன்படி, மருத்துவ மாணவர்களுக்கு நேற்று விடுமுறை வழங்கப்படவில்லை. இன்றும் அனைத்து மாணவர்களும் கல்லூரிக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### தேர்வு கட்டுப்பாடுகள்

தேர்வர்கள் காலை 11 மணி முதல் மதியம் 1.30 மணி வரை தேர்வு மையத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். 1.30 மணிக்குப் பிறகு வந்தால் அனுமதி இல்லை என்று தேசியத் தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

நீட் தேர்வுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை தேசியத் தேர்வு முகமை (என்டிஏ) வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

தேர்வு மையத்துக்குள் தேர்வர்கள் தண்ணீர் பாட்டில் எடுத்துச் செல்லலாம். ஆனால், அவை வெளிப்படைத் தன்மையுடன் அதாவது ஒளிபுகும் விதமாக இருக்க வேண்டும். மத நம்பிக்கை சார்ந்த அடையாளங்கள், பொருட்களை அணிந்து வரலாம். அதேபோல, சாதாரண ஆடைகளை அணிவதே சரியானது. தேவைப்பட்டால் முழுக்கை ஆடைகள் அல்லது கம்பளி ஆடை அணிய அனுமதிக்கப்படுவார்கள். எனினும், முறையான சோதனைக்கு ஒத்துழைக்கும் விதமாக, குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே தேர்வு மையத்துக்கு தேர்வர்கள் வந்துவிடவேண்டும்.

தேர்வர்கள் உயரம் குறைந்த (லோ ஹீல்ஸ்), சாதாரண காலணிகளை அணியலாம். உயரமான காலணிகள், கனமான அணிகலன்கள் அணிவதை தவிர்க்க வேண்டும். தேர்வர்கள் காலை 11 மணி முதல் மதியம் 1.30 மணி வரை தேர்வு மையத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். மதியம் 1.30 மணிக்குப் பிறகு வந்தால் அனுமதி இல்லை. தேர்வு மையத்துக்கு முன்கூட்டியே வந்தடையும் வகையில் பயணத்தை திட்டமிட வேண்டும் என்பது உட்பட பல்வேறு வழிகாட்டுதல்களை என்டிஏ வெளியிட்டுள்ளது.



"தமிழ்ச் சமூகத்தில் உருவான தமிழ்த் தேசியம், சமூக நீதி ஆகிய கருத்து நிலைகளில் காலூன்றி, நடைமுறைப்படுத்திய பேராசிரியரை, அவரது நூற்றாண்டில் கொண்டாட வேண்டியது நமது கடமை.

# தமிழ்த் தேசியம் பேசிய பேராசிரியர்



வீ.அரசு
மேனாள் தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
arasuveerasami@gmail.com

தமிழ்ச் சமூகம் நினைவுகூர்ந்து கொண்டாட வேண்டிய பேராசிரியர்களுள் ந.சஞ்சீவி (1927–1988) ஒருவர். சைவப் பின்புலம் உடைய குடும்பத்தில் பிறந்தாலும், அவர் தம் வாழ்க்கையில் சமயச்சார்பற்ற பொது நிலையில் செயல்படும் மனிதராகவே இருந்தார்.

ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்திய இரட்டை ஆட்சி முறையால், இந்தியர்களும் ஆட்சி அதிகாரம் பெற்றனர். இதன் விளைவாக 'இந்தியத் தேசியம்' எனும் கருத்து உருவானது. தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியத்தோடு இணைந்த இந்தியத் தேசியம் என்பதை ம.பொ. சிவஞானம் (1906–1995) முன்னெடுத்தார். பெரியார் ஈ.வெ.ரா (1879–1973) இந்தியத் தேசியத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை. சமூக நீதி மற்றும் சுயமரியாதையை அடிப்படையாகக் கொண்ட தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்தார். தமிழ்ப் பேராசிரியர்கள் சிலர் ம.பொ.சி முன்னெடுத்த இந்திய தேசியத்தைப் பேசினர்.

மேற்குறித்த ம.பொ.சி. அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டவர் ந.சஞ்சீவி. தனது தலைவர் ம.பொ.சி என்றே கூறுவார். (பிற்காலத்தில் கலைஞர் மு. கருணாநிதியையும் தனது தலைவராக ஏற்றுக் கொண்டார்) ம.பொ.சி. முன்னெடுத்த தமிழ் தேசியத்தை முன்னெடுத்த பேராசிரியர்கள் தெ.பொ.மீ (1901–1980), அ.ச.ஞானசம்பந்தன் (1916–2002), ம.ரா.போ.குருசாமி (1922–2012), மு.வரதராசன் (1912–1974) ஆகியோர் வரிசையில் செயல்பட்டவர் ந.சஞ்சீவி. இவரது சிலப்பதிகாரம் தொடர்பான ஆய்வு தமிழ்த் தேசியப் பின்புலத்தில் உருவானது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வட்டார தலைவர்கள், மருது பாண்டியர், கும்மாந்தன் கான்சாகிபு ஆகியவர்களின் வரலாற்றை எழுதினார். 'வேலூர் புரட்சி' பற்றியும் ஆய்வு செய்து வெளியிட்டார். ந.சஞ்சீவியின் இவ்வகையான ஆய்வுகள் தமிழ்த் தேசியத்தை, இந்தியத் தேசிய மரபோடு முன்னெடுக்கும் பார்வை கொண்டது. காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றிய போது (1950–1960) மேற்குறித்த அரசியல் பார்வையோடு செயல்பட்ட தமிழாசிரியர். இக்காலங்களில் திராவிட இயக்கம் சார்ந்த பார்வைகளோடு செயல்பட்ட தமிழாசிரியர்கள் எண்ணிக்கை மிகுதியாகும். ந. சஞ்சீவி இக்காலங்களில் 'தமிழரசு' இதழ்களில் தொடர்ந்து எழுதி வந்தார். இவ்வகையில் தமிழ்நாட்டில் தமிழாசிரியர்கள் அரசியல் பார்வையுடையவர்களாக இருந்தனர் என்பதற்கு ந.சஞ்சீவி சிறந்த எடுத்துக்காட்டு.

வானவில் அரங்கம்

தமிழ்ச் சூழலில், சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகள் 1930களில் புதிய பரிமாணம் பெற்றன. அதன் வளர்ச்சியாக 1960களில் சங்க இலக்கிய ஆய்வுகள் மு.வ. போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்டன. பேராசிரியர் ச. வையாபுரி பிள்ளை (1891–1956), தனிநாயகம் அடிகள் (1913–1980) முன்னெடுத்த சங்க இலக்கிய ஆய்வு மரபில் வேறொரு முறையியல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உருவானது. இதில் முதன்மையான பங்களிப்பு செய்தவர் ந.சஞ்சீவி. தமது எம்.லிட் ஆய்வில் 'புறநானூறு' பற்றி ஆய்வு செய்தார். முனைவர் பட்ட ஆய்வில் 'செவ்வியல் இலக்கிய நடை: வகைதொகை களஞ்சியம்' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டார். இந்தப் பின்புலத்தில் பிற்கால சங்க இலக்கிய ஆய்வாளர்களுக்கு, நோக்கு நூல் வடிவத்தில் அவை இன்னும் உதவுகின்றன. 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை' எனும் நூல் அவ்வகையில் அமைந்தது.

1974இல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகச் செயல்படத் தொடங்கினார். அத்துறையில் புதிய பாட முறைகளை உருவாக்கினார். சென்னை நகரத்தில் பல இடங்களிலும் முதுகலைத் தமிழ்ப் படிக்கும் மாணவர்களை வாரம் ஒரு முறை பல்கலைக்கழகத்துக்கு வரவழைத்து வகுப்பு நடத்தினார். இந்திய அளவில் 'பழந்தமிழ்', 'காப்பியத் தமிழ்', 'தெய்வத் தமிழ்' எனும் கருத்தரங்குகளை நடத்தினார். உலக அளவில் முதன்முறையாக திருக்குறள் கருத்தரங்கு நடத்தினார். இவை அனைத்தையும் தொடர்ந்து பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டு வந்தார். 'தமிழாய்வு' எனும் ஆய்விதழை நடத்தினார். பல்கலைக்கழக உயர்கல்வியை சிறப்பாகவே முன்னெடுத்தார்.

1975இல் இந்தியாவில் 'அவசர நிலைச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. அரசியல் கருத்து நிலை சார்ந்து செயல்பட்ட பேராசிரியர்கள் மீது அச்சட்டம் ஏவப்பட்டது. 1975–1980 காலங்களில் ந.சஞ்சீவி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். அரசு சார்ந்த நிறுவனங்களில், அரசியல் கருத்து நிலையோடு செயல்பட்டால் இவ்வகையான 'தண்டனைகள்' எனும் 'பரிசுகள்' வழங்கப்படும். இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக ந.சஞ்சீவியின் வாழ்க்கை அமைகிறது. பின்னர் 1980இல் புதிதாக சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'தமிழ் இலக்கியத் துறை' உருவாக்கப்பட்டு அதன் தலைவரானார். தமிழ் படிப்பை தமிழர்களின் பண்பாட்டு வரலாற்றுப் படிப்பாகக் கட்டமைத்தார்.

இக்காலங்களில் இடதுசாரி கருத்து சார்ந்த தலைவர்களோடு ந.சஞ்சீவி தொடர்பில் இருந்தார். இவர் சாதி மறுப்பு காதல் திருமணம் செய்தவர். தமது ஒரே மகளுக்கும் சாதி மறுப்புத் திருமணத்தை நடத்தியவர். தமிழ்ச் சமூகத்தில் உருவான தமிழ்த் தேசியம், சமூக நீதி ஆகிய கருத்து நிலைகளில் காலூன்றி, நடைமுறைப்படுத்திய பேராசிரியரை, அவரது நூற்றாண்டில் கொண்டாட வேண்டியது நமது கடமை.

(பேராசிரியர் ந. சஞ்சீவியின் நூற்றாண்டு நேற்று மே 2 அன்று தொடங்கியது)

---

## 2025-26-ல் வெளிநாட்டு இருப்பில் இருந்து

# இந்தியாவுக்கு வந்த 168 டன் தங்கம்

மும்பை

இந்திய ரிசர்வ் வங்கி கடந்த 2025-26 நிதியாண்டில் 168 டன் தங்கத்தை வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு வந்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையே போர் மூண்ட பிறகு, ரஷ்யாவின் டாலர் கையிருப்பை அமெரிக்கா முடக்கியது. இதையடுத்து, வெளிநாடுகளில் டெபாசிட் செய்து வைத்துள்ள தங்கத்தை இந்திய ரிசர்வ் வங்கி, தாயகம் கொண்டு வரும் நடவடிக்கையில் கடந்த 3 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது.

இதன்படி, கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட தரவுகளின்படி, 2025-26-ன் 2-ம் பாதியில், பேங்க் ஆஃப் இங்கிலாந்து மற்றும் பேங்க் ஃபார் இன்டர்



நேஷனல் செட்டில்மென்ட்ஸ் ஆகியவற்றில் வைக்கப்பட்டிருந்த 104.23 டன் தங்கத்தை ரிசர்வ் வங்கி இந்தியாவுக்கு கொண்டு வந்துள்ளது. முன்னதாக ஆண்டின் முதல் பாதியில் 63.83 டன் தங்கம் கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாக, 2025-26 நிதியாண்டில் ரிசர்வ் வங்கி 168.06 டன் தங்கத்தை இந்தியாவுக்கு கொண்டு வந்துள்ளது. 2023-24-ல் 107.21 டன், 2024-25-ல் 103.68 டன் தங்கம் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டது.

ரிசர்வ் வங்கியின் மொத்த தங்க கையிருப்பு 880.52 டன். இதன் மதிப்பு ஏப்ரல் 17 நிலவரப்படி 122 பில்லியன் டாலர் ஆகும். இதில் இப்போதைய நிலவரப்படி 77 சதவீத தங்கம் இந்தியாவில் வைக்கப்பட்டுள்ளது. மார்ச் 2023-ல் இது வெறும் 38 சதவீதமாக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது. மீதம் உள்ள 23 சதவீத தங்கம் மட்டுமே வெளிநாட்டில் உள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி தனது தங்கத்தை உள்நாட்டுக்கு கொண்டு வருவதில் ஆர்வம் காட்டினாலும், அதன் மொத்த தங்க கையிருப்பில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. கடந்த 3 ஆண்டுகளில் அதன் மொத்த தங்க இருப்பு சுமார் 10 சதவீதம் (86 டன்) மட்டுமே அதிகரித்துள்ளது.

இருப்பினும், மற்ற சில நாடுகளின் மத்திய வங்கிகள் தங்களது இருப்பை தீவிரமாக உயர்த்தி வருகின்றன. போலந்து தேசிய வங்கி 2026-ன் முதல் 3 மாதங்களில் அதிக தங்கம் வாங்கிய நாடாக உள்ளது. உஸ்பெகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் அதிக தங்கம் வாங்கியுள்ளன.

2025-26-ல் கையிருப்பில் பெரிய மாற்றம் இல்லை என்றாலும், ரிசர்வ் வங்கியின் மொத்த அந்நியச் செலாவணி இருப்பில் தங்கத்தின் பங்கு 11.7 சதவீதத்தில் இருந்து 16.7 சதவீதமாக உயர்ந்துள்ளது.

# சிங்கப்பூரில் களைகட்டிய தமிழ் மொழி விழாக்கள்

சிங்கப்பூரின் நான்கு அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியை, அதன் கலாச்சாரச் செழுமை மாறாமல் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் உன்னத நோக்கில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் முழுவதும் 'தமிழ் மொழி விழா' கொண்டாடப்பட்டு வருகிறது. 2007ஆம் ஆண்டு தமிழ் மொழி கவுன்சிலால் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, இன்று ஒரு மாபெரும் சமூக இயக்கமாக உருவெடுத்துள்ளது. மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே தமிழ்ப் புழக்கத்தை அதிகப்படுத்துவது, அன்றாட வாழ்வில் தமிழைப் பேசுவதைப் பெருமிதமாக மாற்றுவது மற்றும் பல இன மக்கள் வாழும் சிங்கப்பூரின் பன்மயச் சூழலில் தமிழ் அடையாளத்தை நிலைநிறுத்துவது ஆகியவையே இவ்விழாவின் முதன்மை நோக்கங்களாகும். கடந்த சுமார் இருபது ஆண்டுகளாக அரசு அமைப்புகள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்களின் ஒருங்கிணைந்த உழைப்பால், இந்த விழா சிங்கப்பூர் தமிழர்களின் வாழ்வில் மிக முக்கியமான ஒரு அங்கமாக மாறியுள்ளது.

**கொண்டாட்டங்கள்**

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முழுவதும் அரங்கேறிய 'தமிழ் மொழி விழா 2026', வழக்கம் போல கலை மற்றும் இலக்கியச் செழுமையுடன் மிளிர்ந்தது. ஏப்ரல் 5ஆம் தேதி இந்திய மரபுடைமை நிலையத்தில் நடைபெற்ற எழுச்சியான தொடக்க விழாவுடன் இந்த ஒரு மாத காலக் கொண்டாட்டங்கள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கின. அதனைத் தொடர்ந்து, ஏப்ரல் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் நமது டாம்பினீஸ் ஹப்பில் அமைக்கப்பட்ட 'ஊர்த் திருவிழா' பொதுமக்களைப் பெருமளவில் ஈர்த்தது. அங்கு தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் கலைகள் மீள் உருவாக்கம் செய்யப்பட்டு, நவீனச் சூழலில் தமிழ்ப் பண்பாடு புதிய பரிமாணத்துடன் வெளிப்பட்டது.

**கல்வித் துறை ஏற்பாட்டில்...**

மாணவர்களின் மொழித்திறனை மேம்படுத்தும் நோக்கில், கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் ஏப்ரல் 8 முதல் 18 வரை பல்வேறு இலக்கிய மற்றும் பேச்சுப் போட்டிகள் சிறப்புற நடைபெற்றன. அதேபோல், தேசிய நூலக வாரியம் சார்பில் ஏப்ரல் மாதத்தின் பல்வேறு தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கதை சொல்லல் மற்றும் வாசிப்பு அமர்வுகள் சிறுவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. ஊடகத் துறையைப் பொறுத்தவரை, மீடியாகார்ப் நிறுவனம் ஏப்ரல் 14ஆம் தேதி நடத்திய நேரலை சிறப்பு நிகழ்ச்சி, தமிழ் உணர்வை ஒவ்வொரு இல்லத்துக்கும் கொண்டு சேர்த்தது. மேலும், ஏப்ரல் 19ஆம் தேதி 'தி ஆர்ட்ஸ் ஹவுஸ்' வளாகத்தில் நடைபெற்ற கவிஞர்கள் சந்திப்பு மற்றும் இலக்கிய உரையாடல்கள், தமிழ் இலக்கியத்தின் ஆழத்தையும் அழகையும் அறிவார்ந்த தளத்தில் விவாதித்தன.

**புங்கோல் மேற்கில்...**

இவ்வாண்டு விழாவின் மிக முக்கியமான மற்றும் விரிவான அங்கமாக புங்கோல் மேற்கு சமூக மன்றத்தின் இந்திய நற்பணிச் செயற்குழு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுகள் அமைந்தன. 'தேன் தமிழ் கொண்டாட்டம்' என்ற பெயரில் ஏப்ரல் 18ஆம் தேதி நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, அந்த வட்டாரத்தில் வாழும் தமிழ் குடும்பங்களை ஒன்றிணைக்கும் ஒரு திருவிழாவாகவே மாறியது. இதில் மாணவர்கள் தங்களின் பேச்சாற்றல் மற்றும் கட்டுரைத் திறனை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், திருக்குறள் ஒப்பித்தல் மற்றும் கலாச்சார மாறுவேடப் போட்டிகளிலும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். குறிப்பாக, மறக்கப்பட்டு வரும் கலைகளான வில்லுப்பாட்டு மற்றும் கர்லாகட்டை சுழற்றுவது போன்ற வீரக் கலைகள் அங்கு நிகழ்த்திக் காட்டப்பட்டது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அரசு மற்றும் சமூகத் தலைவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில், இன்றைய டிஜிட்டல் யுகத்தில் இளைஞர்கள் சமூக ஊடகங்கள் வழியாகத் தமிழை எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.



▲ தமிழ் மொழி விழாவில் நடைபெற்ற வீர விளையாட்டு.

தமிழ் என்பது வெறும் மொழியல்ல, அது ஒரு வாழ்வியல் முறை என்பதை மீண்டும் ஒருமுறை மெய்ப்பிக்கும் வகையில் நடைபெற்ற இந்த ஒரு மாத கால நிகழ்வுகள், சிங்கப்பூரில் தமிழின் எதிர்காலம் பிரகாசமாக இருப்பதை உறுதி செய்துள்ளன.

- த. தமிழ்மதி, சிங்கப்பூர்.